கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்

எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி.
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

S. M. FERNANDO
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

நூலகம் 22-3-1993

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 09 திங்கட்கிழமை (22.03.1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 115

# தெரிவுக் குழுவிலிருந்து சுதந்திரக்கட்சி விலகும்?

## சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் அதே முடிவையே எடுக்குமாம்

கொழும்பு, மார்ச் 22

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகிக் கொள்ளும் என நம்பகமாக அறியப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு சேர்ந்து லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவும் தெரிவுக் குழுவில் இருந்து விலகுவது குறித்து ஆராய்ந்து வருகின்றனவாம்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரஸ்தாப கட்சிகள் மூன்றும் இது சம்பந்தமாக முடிவு எடுப்பதற்காக கடந்த வாரம் கூட இருந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை ஏனைய கட்சிகள் பகிஷ்கரிக்கத் தொடங்கிய பின்னர் அதில் தாம் அங்கம் வகிப்பதில் பயன் எதுவும் இல்லை என்று உணரத் தொடங்கியுள்ளதாக சம்பந்தப்பட்ட மூன்று கட்சிகளையும் சேர்ந்த எம்.பிக்கள் சிலர் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம்.பியான மங்கள முனசிங்கா பதவி வகிப்பது தெரிந்ததே.

தெரிவுக்குழுவில் இருந்து ஸ்ரீ. ல. சு. கட்சி விலகும் பட்சத்தில் திரு. மங்கள முனசிங்காவின் நிலையும் கேள்விக் குறியாக மாறும் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

தெரிவுக்குழு தனது இடைக்கால அறிக்கையில் வடக்கு – கிழக்கு மாகாணத்தை பிரித்துத் தனித்தனி சமஷ்டி அலகுகள் நிறுவப்பட வேண்டும் என்று சிபார்சு செய்திருந்தது.

அதனை ஆட்சேபித்து தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் பகிஷ்கரிக்க முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதி மீண்டும் கூடவிருக்கிறது. (அ-3)

## ம. எண்ணெய் பரல்களுடன் "நில்கிரி" இன்று வந்துசேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஒருதொகுதி மண்எண்ணெயுடன் "நில்கிரி" கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

இக்கப்பலில் ஆயிரத்து நூறுபரல் மண்எண்ணெய் எடுத்து வரப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதிலும் குறைந்த தொகையான மண்எண்ணெய் பரல்களே இம்முறை இக்கப்பலில் எடுத்து வரப்படுவதாக தற்போது தெரிய வருகிறது.

யாழ். மாவட்டத்துக்கு 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய் எடுத்து வர கூட்டுப் படைகள் அனுமதி வழங்கிய பின்னர், அதில் மற்றொரு தொகுதி மண்எண்ணெயே நில்கிரியில் எடுத்துவரப்படுகிறது. (உ-3)

## கொழும்பிலிருந்து வரும் 'பாஜ்'கள் காங்கேசனுக்கு!

பருத்தித்துறை இறங்கு துறைக்கு எடுத்து வரப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்ட இரு "பாஜ்"களும் தற்போது காங்கேசன்துறைக்கு அனுப்பப்படுவதாக கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களைத் துரிதமாக இறக்க வசதியாக இரு 'பாஜ்'களை அனுப்புமாறு யாழ். செயலகம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதனை அடுத்து, 'நில்கிரி' கப்பலில் இரு பாஜ்கள் அனுப்படப்படும் என புனர்வாழ்வு அமைச்சு யாழ். செயலகத்துக்கு தெரியப்படுத்தியிருந்தது.

இன்று வடக்கே வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "நில்கிரி" கப்பலுடன் இந்த பாஜ்களும் எடுத்துவரப்படவிருக்கின்றன.

ஆனால் அவை இரண்டும் காங்கேசன்துறையில் பொருள்களை ஏற்றி இறக்கவே பாவிக்கப்படும் என தற்போது யாழ். செயலகத்துக்கு தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. (உ-ஒ-3)

## வவுனியா ரயிலில் வந்த 80 பயணிகள் மயங்கினர்!

கடந்த வாரம் கொழும்பில் இருந்து வவுனியா வந்த ரயிலில் பயணம் செய்த சுமார் 80 பயணிகள் அரைகுறை மயக்க நிலையில் வவுனியாவை அடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் எஸ். ஜெகநாதன் (வயது 25), ஆர். உதயகுமார் (வயது 28) ஆகியோரும் மற்றொருவரும் வாந்தி, வயிற்றோட்டம் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்சப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில் பெட்டியில் தனியாரால் விற்பனை செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை வாங்கிச் சாப்பிட்டவர்களே இவ்வாறு மயக்கமடைந்தனர் என்றும் —

மயக்கமுற்றவர்களில் படைச் சிப்பாயும் ஒருவர் என்றும் — கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

## துப்பாக்கியுடன் தப்பி ஓடிய சிப்பாய் சிலாபத்தில் கைது

பனாகொடை இராணுவ முகாமில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நள்ளிரவில் தமது துப்பாக்கியுடன் தப்பி ஓடினார். மறுநாள் சிலாபம் பகுதியில் வைத்து பொலீஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

பொலீஸ் தலைமை அலுவலக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

சமரஜீவ என்ற பிரஸ்தாப இராணுவச் சிப்பாய் கடந்த 14 ஆம் திகதி நள்ளிரவு காவல் கடமையில் இருந்த போது தமது ஜி-3 துப்பாக்கியுடன் "நைஸாக" தப்பி ஓடிவிட்டார்.

அடுத்த நாள் திங்கட்கிழமை சிலாபம் தும்முலசூரிய பொலீஸ் பகுதியில் வைத்து துப்பாக்கியுடன் அவர் கைது செய்யப்பட்டார். (உ-3)

## தமது மிதிவெடியிலேயே சிக்கி பலியான சிப்பாய்!

### மகாஓயாவில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 22

தாம் புதைத்த மிதிவெடியிலேயே சிக்கி விமானப் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமுற்றார்.

இந்தச் சம்பவம் பொலன்றுவை மாவட்டம் மகாஓயாவில் கடந்த திங்கள் இரவு இடம்பெற்றதாக பொலீஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மகாஓயாப் பகுதியில் உள்ள விமானப்படைத்தளம் ஒன்றின் மீது அன்றைய தினம் இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்றும் —

புலிகளை எதிர்த்து தாக்கிய விமானப்படைச் சிப்பாய் ஒருவர் தாமே புதைத்து வைத்த மிதிவெடியில் சிக்கி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்ற மற்றொரு சிப்பாய்கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-3)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஆனையிறவு கறுக்காய் வெட்டைப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை மகாலிங்கம் அல்லது மயூரன் (சிவராசா இலகராஜ் - காளி கோவிலடி, சாவகச்சேரி) வீரமரணமடைந்தார். (ஒ-3)

## ஒற்றை ஆட்சி முறையை நீக்க தமிழ்க் கட்சிகள் கோரும்

கொழும்பு, மார்ச் 22

அரசியலமைப்புச் சட்டத்தின் இரண்டாவதுஷரத்தை— அதாவது இலங்கைக் குடியரசு ஒன்றையாட்சி உடைய அரசாகும் என்றஷரத்தை — திருத்தாமல் பயனுள்ள அதிகாரப் பரவலை செய்ய முடியாது. ஆகையால் அந்த ஷரத்தைத் திருத்த வேண்டும்.

இவ்வாறு கொழும்புத் தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையை நிராகரித்து அதற்குப் பதிலாக தாம் ஓர் அறிக்கையைத் தயாரிக்கத் தமிழ்க் கட்சிகள் முடிவு செய்திருந்தன.

உத்தேச அறிக்கை குறித்து ஆராய்வதற்காக கடந்த வாரத்தில் பிரஸ்தாப கட்சிகள் சிராவஸ்தியில் கூட்டம் ஒன்றை நடத்தின.

எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கையளிக்கும் அறிக்கையில் ஒப்பமிடும் அதேவேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனியான அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள்குறித்த நீண்ட நேரம் ஆராயப்பட்டது. இனப் பிரச்சினைக்கு உள்நாட்டிற்குள்ளேயே தீர்வு காணப்படுவது சாத்தியமா என்பதும் ஆராயப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (அ)

ஸ்ரீலங்கா கொள்வனவு செய்துள்ள

## புதிய விமானங்கள் வந்ததும் நடவடிக்கைகள் தீவிரமாகும்

### இராணுவ வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 22

வெளிநாடுகளில் ஸ்ரீலங்கா அரசு புதிய விமானங்கள் ஹெலிகள் பலவற்றை கொள்வனவு செய்துள்ளது. அவற்றில் பல கொழும்பு வந்து சேர்ந்து விட்டன. இன்னும் பல வந்து சேரவுள்ளன.

அவை வந்து சேர்ந்தவுடன் வடக்கு – கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தீவிரமாகும்.

கொழும்பில் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

ஆர்ஜென்ரீனாவில் [illegible] இருந்து கொள்வனவு [illegible]யப்பட்ட 'புக்காரா' விமானங்களில் மூன்று ஏற்கனவே வந்து சேர்ந்து விட்டன. மற்றொரு 'புக்காரா' இன்னும் சில தினங்களில் கொழும்பு வந்து சேரவுள்ளது. மேலும் ரஷ்ய ஹெலிகள் பலவும் ஸ்ரீலங்காவால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன அவையும், கொழும்புக்கு கொண்டு வர ஏற்பாடாகி விட்டன. இந்த ஹெலிகள் போர்க்களத்துக்கு என்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்டவை.

இவை அனைத்தும் வந்து சேர்ந்ததும் [illegible] தொடுத்த [illegible] இராணுவ நடவடிக்கை முடுக்கி விடப்படும்.

இவ்வாறு கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை —

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 'புக்காரா' விமானங்கள், கடந்த சில வாரங்களாக வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பிரதேசங்களில் பரவலாக தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சுக்களை நடத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## கரை ஒதுங்கிய சடலங்கள்

கொடிகாமம், மார்ச் 22

கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் கச்சாய் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஓர் ஆணின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இதேவேளை – கடந்த வெள்ளிக்கிழமை ஒளாலிக் கரையோரத்தில் பகல் 11மணியளவில் இரு ஆண்களின் சடலங்களும் மாலை 4 மணியளவில் மற்றுமோர் ஆணின் சடலமும் கரையொதுங்கியது. சடலங்களின் தலைப்பகுதியில் எரிகாயங்கள் காணப்பட்டன.

## வடக்கு-கிழக்கில் நேற்று மோதல் சம்பவங்கள்

வடக்கு—கிழக்கில் நேற்று முன்தினம் வெவ்வேறு இடங்களில் ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன. என்று கூட்டுப் படைகள் தலைமையகம் அறிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரணைக்குளம் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதே பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இன்னொரு மோதலும் இடம்பெற்றது.

வடபகுதியில் ஆனையிறவு அருகே பாதுகாப்பு எல்லையில் காவல் புரியும் இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் கூட்டுப் படைகள் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

இலங்கை வானொலி செய்தியில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. (ஒ-எ)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 1 மணிக்கு சுற்றுப்புறக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தொண்டமானாறு, இடைக்காடு, பத்தமேனிப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. (உ-15)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவை தனியாரிடம்!

கொழும்பு, மார்ச் 22

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக சேவை தனியாரிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் வருமானம், நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்துவது மற்றும் வர்த்தக சேவைக்குக் கூடுதல் சுதந்திரம் கொடுப்பது ஆகிய காரணங்களுக்காகவே இத்திட்டத்தை செயற்படுத்துவதில் அரசு வட்டாரங்கள் அதிக அக்கறை காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது [உ-எ]

## பாரதீய ஜனதா கூட்டம் சென்னையில் நடந்தது!

### நகரில் அத்வானியின் 'கட் அவுட்'கள்

சென்னை, மார்ச் 22

கடந்த சில தினங்களாகப் பரபரப்பாக பேசப்பட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுக்கூட்டம் நேற்று மாலை சென்னை கடற்கரையில் நடந்தது.

அதனையொட்டி சென்னை மாநகர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பதற்றமானது என்று அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கூடுதலான எண்ணிக்கையில் பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை — சென்னை நகர் எங்கும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானியின் பெரிய அளவிலான உருவப் படங்கள் ('கட் அவுட்'கள்) காணப்பட்டன என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

ஏனைய மாநிலங்கள் பலவற்றிலும் பாரதீய ஜனதா கட்சியின் கூட்டங்களுக்கும் பேரணிகளுக்கும் அம்மாநிலங்கள் தடை விதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் நேற்று

## அத்வானிக்கு கறுப்புக்கொடி காட்ட முயன்றவர்கள் கைது

சென்னை, மார்ச் 22

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானிக்கு நேற்று சென்னையில் கறுப்புக் கொடி காட்ட முயன்ற பலர் கைது செய்யப்பட்டனர்.

பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அனைத்திந்திய இளைஞர் மன்றம் ஆகியவற்றின் தொண்டர்கள் சுமார் 200 பேரே கைதாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயக மரபுப்படி கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிக்க ஒவ்வொரு இந்தியனுக்கும் உரிமை உண்டு என்றும்—

இதனை மறுத்த தமிழக அரசை வன்மையாகக் கண்டிப்பதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகக் கிளை அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றன

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்யும் தரத்தில் சிறந்த காவேரி சியாக்காய்ப் பவுடர் விற்பனையாகிறது. தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ் இல: 15, ஆடியபாதம் வீதி, நல்லூர். (24881)

ஆண்டு 9, 10, 11 மாணவர்களுக்கான ஆங்கிலக் கட்டுரை நூல், Model Essays, ஆண்டு 3, 4, 5 மாணவர்களுக்கான Children's Essays விற்பனையாகின்றன. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (24872)

### வெளிவந்துவிட்டன!

ஆண்டு 1 மாணவர்களுக்கான தமிழ் செயல்நூல் புதிய பாடத் திட்டத்திற்கமைய ஆக்கப்பெற்றது; ஆண்டு 3 மாணவர்களுக்கான சிறுவர் கணிதம் ஆக்கம்: த. ஆனந்தன். ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (24873)

### றோனியோ - பிரதி

குறித்த தவணையில் தரமான முறையில் றோனியோ பிரதி செய்து கொடுக்கப்படுகிறது. 100 பேப்பர் இரண்டு பக்கம் றோனியோ செய்வதற்கு 30/- ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி 4716)

### A/L மாதிரி வினாத்தாள்

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை, கணிதப் பிரிவுகளுக்கான அனைத்துப் பாடங்களுக்கும், மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி 4561)

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கான வினாத்தாள்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-4563)

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் - ஒவ்வொரு மாதத்திலும் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஊக்குவிப்புப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4562)

### வரலாறு ஆண்டு 9, 10

'குறிப்புகள்' வெளிவந்துள்ளன பயிற்சிகளுக்கு விடைகள், வினா-விடைகள் கொண்டமைந்தது. மாணவர்கள் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்ய ஏற்றது. ஆக்கம்: நா. மயில்வாகனம் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். (24912)

### செயல் நூல் ஆண்டு 6, 7.

'வரலாறும் சமூகக்கல்வியும்' வெளிவந்துவிட்டது. 500 வினாக்களுக்கு, செயற்பாடுகளுக்கு விடைகள். மூன்று தவணைகளுக்கும் நான்கு மாதிரி வினாத்தாள்கள், விடைகளுடன் (முதலாம் தவணைக்கு இரண்டு) விலை 28/50, 32/- ஆக்கம்: நா. மயில்வாகனம், சென். ஜோன்ஸ் கல்லூரி. (24911)

# வவுனியா கல்விக் கல்லூரியை சிங்களமயமாக்க முயற்சி

## 25 சதவீத சிங்கள ஆசிரியரை அனுமதிக்க முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 22

தமிழ் ஆசிரியர்களுக்காக வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கல்விக் கல்லூரியில் 25சத வீதம் சிங்கள ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

முழுமையாக தமிழர்களுக்கென அமைக்கப்பட்ட இக் கல்விக் கல்லூரியை இரு மொழிக் கல்விக் கல்லூரியாக மாற்ற அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் இது தொடர்பாக ஜனாதிபதிக்கும், கல்வி ராஜாங்க அமைச்சருக்கும் மகஜர்களை அனுப்பி உள்ளார்.

சிங்கள ஆசிரியர்களுக்கென ஹவா, கப்பித்திகம, நில்வளா, மகாவலி, சாரிபுத்திர, பெனேபஸ்டுன்றட்ட என ஏழு கல்விக் கல்லூரிகளும்—

கிழக்கில் அட்டாளைச்சேனையில் முஸ்லிம்களுக்கென ஒரு கல்விக் கல்லூரியும்—

மலையகத் தமிழர்களுக்காக கொட்டகலையில் ஒரு கல்விக் கல்லூரியும் அமைக்கப்பட்டுள்ளன.

மலையகத் தமிழர்களுக்காக கொட்டகலையில் அமைக்கப்பட்ட கல்விக் கல்லூரி பின்னர் ஸ்ரீபாத கல்விக் கல்லூரி என பெயர்மாற்றப்பட்டு அதிலும் 25 சத வீத சிங்கள ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

தற்போது வவுனியாவில் தமிழர்களுக்கென அமைக்கப்பட்ட கல்விக் கல்லூரியிலும் இதே நடைமுறை கையாளப்பட்டிருப்பது தமிழ் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பெரும் துரோகம் என ஜனாதிபதிக்கும், கல்வி ராஜாங்க அமைச்சருக்கும் அனுப்பப்பட்டுள்ள மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மதவாச்சியில் உள்ள சிங்கள மக்கள் ஏனைய சிங்கள மொழி மூல கல்விக் கல்லூரிகளில் அனுமதி கோரத் தகுதி உடையவர்கள். எனவே அவர்களுக்கு மேலதிகமாக வவுனியா கல்விக் கல்லூரியில் இடம் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

சில்லாலை

## அத்தனாசியார் பிரதம வைத்தியசாலை

புதிய இடம்: 124, ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(கல்வியங்காடு சந்தியிலிருந்து நாயன் மார்கட்டு பக்கமாக 100 மீற்றர்)
(எஸ். சுப்பிரமணியம் கொம்பனி முன்பாக)

சிகிச்சை நேரம்:
தினமும் காலை 7-00 மணி — 1-00 மணி
பிற்பகல் 3-30 மணி — 6-00 மணி
[ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் லீவு நாள்]

சில்லாலையில் பெற்றுக்கொண்ட அதே தரத்தில் சகல எண்ணெய் வகைகளையும், மருந்துவகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

— வைத்திய கலாநிதி எமில் அத்தனாசியார்.
(6064)

---

## 31ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

22 — 03 — 1993



### திருமதி பாக்கியம் இராமலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை, கோப்பாய்)

தோற்றம்: 24 — 03 — 1931
மறைவு: 20 — 02 — 1993

அமரத்துவமெய்திய எமதில்லத் தலைவியின் நோயுற்ற நிலையில் வைத்திய உதவியளித்த யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதிகள், வைத்திய கலாநிதிப்பட்ட நெறி மாணவர்கள், தாதியர் மற்றும் ஊழியர்கள் யாவருக்கும் வைத்திய சுகாதார நலன்புரிச் சங்கப் பணியாளர்களுக்கும், தொண்டு நிறுவன அங்கத்தவர் பரோபகாரிகட்கும், மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து துயர் தனில் பங்கு கொண்டு மலர் வளையம் சாத்தி, இரங்கலுரை நிகழ்த்திக் கண்ணீர் அஞ்சலி செலுத்தி இறுதி யாத்திரையில் கலந்து பல வழிகளிலும் உதவி ஆறுதலளித்துள்ள யாபேருக்கும் மனமார்ந்த நன்றி.

இன்று 2-03-1993 இல் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும், பகல் போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அன்புள்ள கணவனும்,
உறவினரும்,

நாவலடி,
கோப்பாய்.
(24907)

---

## டானியல் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்தும் அமரர் கே. டானியலின் நினைவுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.15 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

செல்வி சு. மாதவி தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அறிமுகவுரை நிகழ்த்துவார். பல்கலைக்கழக கிறிஸ்தவத்துறைத் தலைவர் வணபிதா. கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியின், பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நினைவுப் பேருரைகள் நிகழ்த்துவர். எம். ஆர். பி. டயஸ் நன்றியுரை வழங்குவார். (த)

## இரட்டை சூட்டடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

தமிழ்ப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதியினர் விறகைச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கூடிய, சிறந்த தொழில் நுட்பமுறையில் தயாரிக்கப்பட்ட இரட்டைச் சூட்டடுப்புகளை அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

இந்த அடுப்பின் பயன்பாடு பற்றியும், பாவனை முறை பற்றியும் பாடசாலைகள் தோறும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் நடைபெறும் கிராமிய உற்பத்திக் குழுக்களின் கூட்டங்களிலும்—சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், தென்னம் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கப் பணிமனைகள் ஆகியவற்றில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்குகளிலும்—இது தொடர்பான விளக்க உரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-154)

## கல்லுண்டாய் பாதை

கல்லுண்டாய் - காரைதீவு பிரதான பாதையில் நண்டு, இறால் முதலியவற்றைக் கொட்டித் தெரிந்தெடுப்பதால் ஊரி, கல்லுக்குறுணி ஆகியவை வீதியில் அங்கும் இங்கும் பரவி போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருக்கிறது இதனால் பலருடைய சைக்கிள் டயர்கள் பழுதடைந்துள்ளன. (க-161)

---

## சம்பந்தர் மொடேர்ண் வைத்திய நிபுணர்கள்- தனியார் வைத்தியநிலையம்.

8, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(யாழ். மருத்துவமனை முன் ஒழுங்கை)

★ இங்கு எல்லா வைத்திய நிபுணர்களின் சேவையும் வழமைபோல் நடைபெறுகின்றது.

கண் வைத்திய நிபுணர் டாக்டர் சி. அருணாசலம் அவர்களின் கண் சிகிச்சை ஞாயிறு தவிர தினமும் 11மணியில் இருந்து 12 மணி வரை நடைபெறும்.

இவர் 18-03-1993இல் லண்டன் பயணம் முடித்து வந்துள்ளார்.
(24910)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்: 12 — 07 — 1970



வீரச்சாவு: 22 — 03 — 1991

### குலநாதன் குலமோகன்

(மகாஜனக் கல்லூரி பழைய மாணவன்)
(லெப். றொபேட்)

"அன்பு இலார் எல்லாம் தமக்குரியர் அன்பு உடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

தமிழ் இனத்தின் விடிவிற்காகத் தம்மையே தியாகம் செய்த மாவீரர்கள் அனைவருக்கும் எம் மனம் நிறைந்த அஞ்சலிகள்.

பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள்.

"உதயம்"
[illegible]
(5848)

---

## ஐ. தே. கவின் முன்னாள் முதலமைச்சர்களே மீண்டும் போட்டியிடுவர்

கொழும்பு, மார்ச் 22

கலைக்கப்பட்ட மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் அனைவரையும் மீண்டும் போட்டியிட நியமிப்பதென ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

செயற்குழுவின் விசேட கூட்டம் கடந்த சனிக்கிழமை ஸ்ரீகோதாவில் நடைபெற்றது.

ஏழு மாகாண சபைகளில் உள்ள 366 இடங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கென ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் உயர் நிலைக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. (த-எ)

## தமிழ்நாடு காங்கிரஸை பொறுத்தவரை கூட்டணி முறிந்துவிட்டது!

### வாழப்பாடி சொல்கிறார்

சென்னை, மார்ச் 22

தமிழ்நாடு காங்கிரஸைப் பொறுத்தவரையில் அ. தி. மு. க காங்கிரஸ் உறவு முறிந்து போய்விட்டது இது தான் எங்களின் இறுதியான முடிவு —

இப்படி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறினார்.

கடந்த சனிக்கிழமை தமிழ்நாடு காங்கிரஸ் எம்.பிக்கள், எம். எல். ஏக்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்தின் பின்னர் திரு. இராமமூர்த்தி செய்தியாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கூட்டணி உறவை ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொண்ட அ. தி. மு. க. தமது முடிவை மறுபரிசீலனை செய்யும்படி காங்கிரஸ் கோராது என்றும் —

கூட்டணிக்குப் புத்துயிர் கொடுக்க காங்கிரஸ் தலைவர் வற்புறுத்தமாட்டார் என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

கூட்டணி உறவுக்குப் பாதகமாக ஏதும் செய்ய வேண்டாம் என்று தமிழ் நாடு காங்கிரஸை பிரதமர் நரசிம்மராவ் கேட்டுக் கொண்டார் என்பதை மறுத்த அவர் —

காங்கிரஸ் தலைவரிடமிருந்து அப்படியான உத்தரவு ஏதும் வரவில்லை என்று கூறினார்.

பழனி நாடாளுமன்றத் தொகுதி மற்றும் ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி ஆகியவற்றுக்கான இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் போட்டியிடும் என்றும் அவர் கூறினார். (த-எ)

## ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை இவ்வாண்டு முதல் இருமடங்காக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணமும் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 400 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் கல்வித் துறையில் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் நாட்டில் சுமார் 7 ஆயிரம் பாடசாலைகள் இந்த ஆண்டில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

---

## வினா-விடைப் போட்டி முடிவுகள்

சென். ஜோன்ஸ் கல்லூரி இன்ரறக்ட் கழகம் நடத்திய சென்றல் - சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்திற்கான வினாவிடைப் போட்டியின் முடிவுகள்:

முதலாம் பரிசு:-
திருமதி சிவஞானலிங்கம்
விதானையார் வீதி,
சண்டிக்குளி.

இரண்டாம் பரிசு:-
செல்வன் க. லோகேசன்
சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு:-
செல்வி. க. சிவநேர்மைச்சுரபி
117, கல்லூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

— சென். ஜோன்ஸ் கல்லூரி,
இன்ரறக்ட் கழகம் —

(24916)

---

## ஐங்கரன் விளையாட்டுக் கழகம்

ராசி சில்க்ஸ், மதுரா சில்க்ஸ் ஆதரவில் நடத்தும்

சுற்றுப் போட்டி

★ கிரிக்கெட் (மென்பந்து) 11 பேர் கொண்ட 20 ஓவர்
★ கரப்பந்தாட்டம் SET-UP லீக் முறையில்

பிரவேசக் கட்டணம் : ரூபா 50/- மட்டும்
விண்ணப்ப முடிவு திகதி : 31 - 03 - 1993

விண்ணப்பப் பத்திரம் கிடைக்கும் இடங்கள் :

ராசி சில்க்ஸ் ஆடையகம்,
70, 71A, நவீன சந்தை
(உட்புறம்),
யாழ்ப்பாணம்

ஐங்கரன் -
விளையாட்டுக் கழகம்,
50/3, 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4567)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பிரதான காரணம்

யாழ்ப்பாணப் பகுதிக்கான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டிருப்பதால் தமது நிவாரணப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இங்கு வந்துள்ள போரூட் மற்றும் றெட்பானா பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

போக்குவரத்துச் சிரமங்களும் அறிகுறிகள் தென்படுவதாகவும், நிலைமை சரியானதும் தமது நிவாரண மற்றும் அபிவிருத்திப் பணிகள் விரிவடையும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்துக்கு நேரில் வருவதும், இங்கிருந்து தகவல்களை உடனுக்குடன் அறிவதும் சிரமமாக இருப்பதால் தமது பணிகளைச் செவ்வனே செய்ய முடியவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மக்களுக்கு அரசு தனது தரப்பில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்யவில்லை. தமிழர்கள் தனது பிரசைகள் என்று கூறிக்கொண்டே அரசு போருக்கு மேலதிகமாக அவர்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடையையும், போக்குவரத்துத் தடையையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆகையால் தொண்டர் நிறுவனங்களின் உதவியும் நிவாரணமும் சாதாரண காலங்களைவிட இப்போது தான் அதிகமாகத் தேவை.

போரூட், றெட்பானா தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது பணிகள் இங்கு பாதிக்கப்பட்டதற்குக் கூறிய காரணங்கள் புரிந்து கொள்ளக் கூடியவை தான். எனினும் இப்போது நேரில் வந்தவர்கள், சற்று வேளைக்கு வந்திருந்தால், உதவியையும் உரிய காலத்தில் வழங்குவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய வேளையில் உதவியே ஆகவேண்டும் என்ற நிறைந்த மனதுடன் கொழும்பில் வதிவிட அலுவலகங்களைக் கொண்டியங்கும் தொண்டர் நிறுவனங்கள் செயற்பட்டிருப்பின் அரசாங்கம் அவர்கள் இங்கு வருவதை தடுத்து, தாமதப்படுத்தி தனது அதிகாரத்தனத்தைக் காட்டி இருக்க முடியாது. ஏனெனில் தொண்டர் நிறுவனங்களின் ஆதரவும், உதவியும் அரசுக்குத் தேவை என்பதை அது மறந்து விட நியாயமில்லை.

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் யாழ்ப்பாண மக்கள் விடயத்தில் உடனடியாக தாமாகவே முன்வந்து அக்கறை கொள்ளாமைக்கு பிரதான காரணம் வேறு ஒன்று உண்டு என்பது தெளிவாகியிருக்கிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், ஸ்கன்டினேவியன் நாடுகளிலும் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. யூகோஸ்லேவியா, சோமாலியா ஆகிய நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டியுள்ளது. ஆகையால் இலங்கை மக்களுக்கு உதவுவதை இயன்றவரையே செய்ய முடிகிறது. எமது பிரதேச நாடுகளில் கொடையாளர்களையும், இலங்கை போன்ற நாடுகளில் இரப்பவர்களையும் உருவாக்குவது எமது நோக்கமல்ல. அபிவிருத்தி நோக்கிய வேலைத் திட்டத்துக்கே நாம் முன்னுரிமை கொடுக்கிறோம். — என்று போரூட், றெட்பானா பிரதிநிதிகள் தெரிவித்திருக்கின்றனர். அவர்களின் உதவி தேவைக்கேற்ப இங்கு கிடைக்காதிருப்பதற்கு அதுவே முதன்மைக் காரணம்!

இத்தகைய பின்னணியில் போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று திருப்தி கொள்வதைத் தவிர தமிழர்களுக்கு வேறு ஆறுதல் இல்லை. தன் கையே தனக்கு உதவி என்பதை றெட்பானா, போரூட் பிரதிநிதிகள் மறைமுகமாக உணர்த்தி இருக்கிறார்கள்.

---

மாகாணசபைத் தேர்தல்கள்;

## 50 ஆயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபடுவர்

கொழும்பு, மார்ச் 22

கலைக்கப்பட்ட ஏழு மாகாணசபைகளுக்காக நடைபெறும் தேர்தலின் போது ஐம்பதாயிரம் பொலீஸார் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் —

தேர்தலில் வாக்களிக்கும் தகைமையை 93 லட்சம் பேர் பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 9,200 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மாகாணசபைத் தேர்தல் முடிந்து இரண்டு வாரங்கள் வரை கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலீஸார் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சி கூட்டணியின் வேட்பாளராக சந்திரிகா!

கொழும்பு, மார்ச் 22

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மேல் மாகாண முதலமைச்சர் பதவிக்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை நிறுத்துவது என்று சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணி முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முடிவு சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், சந்திரிகாவின் சகோதரருமான அனுரா பண்டாரநாயக்காவுககு பிடிக்கவில்லை என்றும் —

இதன் காரணமாக மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை, பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ந்து போட்டியிடுமாறு அனுரா அழைத்திருப்பதாகவும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

இந்த அழைப்பின் நோக்கம், சந்திரிகாவை முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடாமல் செய்வது என்றும் அதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் லலித் அத்துலத் முதலியை நிறுத்துவது என்றும் அப்பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

## மீன்கறி உண்ட ஐந்துபேர் வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 22

மதிய உணவு சாப்பிட்ட பின்னர் சோர்வடைந்து மயக்கமுறும் நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கலவாய் மீன் எனக்கூறி தோல் உரிக்கப்பட்டுத் துண்டுகளாக வெட்டி விற்பனை செய்யப்பட்ட ஒருவகை மீனை சைக்கிள் வியாபாரியிடமிருந்து வாங்கி கறி சமைத்து உண்ட பின்னரே மேற்படி ஐவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலி-அச்செழுப் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான கந்தையா வடிவேல், அவரது மனைவியான திலகவதி, பிள்ளைகளான காண்டீபன், கஜன், மற்றும் கனகசபை தவமணி ஆகியோரே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (த-3 15)

## பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபத்தில் தவறுகள்

### பட்டதாரி ஆசிரியர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா, மனையியல் டிப்ளோமா, திறந்த பல்கலைக்கழக டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தொடர்பாக அண்மையில் பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில் தவறுகள் காணப்படுகின்றன. மேற்படி ஆசிரியர்களின் சம்பளத் திட்டம் தவறாகவும், பிழையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம், கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். டீ. டீ. பீரிஸ் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. ஜனைட் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா, மனையியல் டிப்ளோமா, திறந்த பல்கலைக்கழகத்தின் கணித, விஞ்ஞான டிப்ளோமாப் பட்டம் பெற்ற ஆசிரியர்களின் ஆரம்பச் சம்பளம் ரூபா 25,000க்குப் பதிலாக ரூபா 21,600 எனப் பிழையாகவும், குறைவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், உச்சச் சம்பளமும் ரூபா 37,000க்குப் பதிலாக ரூபா 30,600 எனக் குறைவாகவும், பிழையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பிழையாகவும் குறைவாகவும் பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையினால் 93 ஜனவரியிலிருந்து அரசின் கொள்கைக்கு அமைவாக சம்பளத்தை மாற்றியமைக்கவோ அல்லது 30% சம்பள உயர்வை பெறவோ முடியாத நிலை இவ்வகையான ஆசிரியர்களுக்கு உண்டு.

எனவே இவ்விடயத்தை உடன் கவனித்து விடப்பட்ட பிழையைத் திருத்தி, சரியான சம்பளத் திட்டத்தில் இவர்களை அமர்த்தக்கூடியதாகவும், 30% சம்பள உயர்வு தாமதமில்லாது கிடைக்க ஆவன செய்யும் படியும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## வடக்கில் நோய்ச் சமுதாயம் உருவாகும் ஆபத்து நிலை

### நவசமசமாஜக் கட்சி பிரதிநிதி கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வட பகுதியில் மருந்து வகைகளுக்கும், தொற்று நீக்கிகளுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுவதால் அங்கு நோய்ச் சமுதாயம் ஒன்று உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்கான அமைச்சரவை மட்ட இணைப்புக் குழுவின் நவசமசமாஜக் கட்சிப் பிரதிநிதி ஒருவர் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறுமாத காலமாக வடபகுதிக்குத் தரைமார்க்கமான எதுவித மருந்து விநியோகமும் நடைபெறவில்லை என்றும் —

இருதய வியாதி, புற்று நோய், தொழுநோய், விசர் நாய்க்கடிநோய், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் போன்றவற்றால் வடபகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் மருந்துகளின் [illegible] அத்தியாவசியமானதாக [illegible] தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

---

### பாடசாலைகளில்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (த)

o o o

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1-30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த)

o o o

கொழும்புத்துறை, மார்ச் 22

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு க. தங்கராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு சி. வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு த. அருணகிரி ராஜாவும் பங்குபற்றுவர். [உ-30]

### ஆலயங்களில்

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய் காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாட்கள் நடைபெறும். (த)

### அல்போன்ஸை மீண்டும் தாக்க முயற்சி!

சென்னை, மார்ச் 21

தமிழ் நாடு காங்கிரஸ் எம்.எல்.ஏ பீட்டர் அல்போன்ஸை மீண்டும் தாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுப்பதாக பொலீஸ் ஆணையாளர் ஸ்ரீபால் உறுதியளித்துள்ளார்.

பீட்டர் அல்போன்ஸ் சட்டசபை உறுப்பினர் விடுதியில் வைத்து ஏற்கனவே ஒருமுறை மூவரால் தாக்கப்பட்டார் என்பது தெரிந்ததே. (த-எ)

### இன்றைய ஆட்டங்கள்

மயிலணி, மார்ச் 22

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் லீக் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

★ புத்தூர் வீனஸ் அணி எதிர் உரும்பராய் தெ. ப. பொ. ந. பு. ச. அணி

★ இளவாலை யங் ஹென்றிஸ் அணி எதிர் மூளாய் சத்தியா அணி (உ-89)

### நூல் வெளியீடு

குருநகர், மார்ச் 22

யாழ் திருமறைக் கலாமன்றம் விவிலிய நாடக நூல் வரிசையில் ''காலையும் மாலையும்'', ''மண்ணே சாட்சி'', ''பலிக்களம்'' ஆகிய மூன்று நூல்களை இன்று வெளியிடவிருக்கிறது.

இன்று மாலை 5 மணிக்கு மன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள் தலைமையில், யாழ் பிரதான வீதியில் உள்ள மன்றக் கேட்போர் கூடத்தில் வெளியீட்டு நிகழ்வு நடைபெறும்.

முன்னாள் யாழ். ஆயர் கலாநிதி வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை நூல்களை வெளியிட்டு வைப்பார். (உ-51)

### பண்டிதர் வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

பால பண்டித, பிரவேச பண்டித வகுப்புகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்புகளில் பங்குபற்றுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்தோரை ஆரம்ப நிகழ்வுக்கு [illegible] மாறு யாழ். [illegible] கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

---

## தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள பல்வேறு இலக்கிய அமைப்புக்களும் இணைந்த தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஒன்று அண்மையில் யாழ். செயலகத்தில் உதயமானது.

எழுத்தாளர்களின் படைப்புகளை நூல்வடிவம் பெறச் செய்வது மற்றும் எழுத்தாளர்களை ஒன்றிணைத்துப் பெறப்படும் பொது நிதியத்தின் உதவியுடன்— காகிதாதிகள், எழுதுகோல்கள் போன்ற எழுத்தாளர்களின் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அன்றைய நிகழ்வின்போது ஒன்றியத்தின் பாவனைக்கென ஆனைப்பந்தி ஐக்கிய நேசவாளர் பணிமனை கட்டடம் யாழ் அரச அதிபரால் ஒன்றியத்தின் செயற்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-5)

★ யாழ். பல்கலைக்கழக

## புறநிலைப் படிப்பு அலகின் விரிவுரைகள், போதனைகள்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பல்வேறு விஷயங்கள் சம்பந்தமான பொதுவிரிவுரைத் தொடர்களையும் கற்கை நெறிகளையும் நடப்பாண்டில் நடத்தவுள்ளது.

இவ் வகுப்புகளில் பங்கு கொள்வோருக்கு கல்வித் தகைமைச் சான்றிதழ் எதுவும் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது விரிவுரைகளில், உணவு ஊட்டச் சத்தும், தற்கால அனைத்துலக விவகாரங்கள், ஈழத்தில் தமிழர் வரலாறு ஆகியன அடங்கும். கற்கை நெறிகளில் சிறு தொழில் முயற்சிகள், தற்சார்புக் கிராமிய அபிவிருத்தி, செயல் திட்ட செயல்முறைகள், பெண்களும் அபிவிருத்தியும், பத்திரிகைக் கலை, உளவளத்துறை ஓர் அறிமுகம், வானியலும் சோதிடக் கலையும், ஈழத்தில் நவீன தமிழ் ஆக்க இலக்கியங்கள், தற்கால அரங்கியலும் நாடகமும் ஆகியன அடங்கும். (க)

பம்பாய் குண்டுவெடிப்பு:

## பிரதான சந்தேக நபர்கள் சவூதிக்குத் தப்பிச் சென்றனர்

டுபாய், மார்ச் 22

பம்பாய்க் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டுவரும் பிரதான சந்தேக நபர்களான மேமன் சகோதரர்கள் இருவரும் தற்போது சவூதி அரேபியா சென்றிருப்பதாக புதுடில்லிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

டுபாயில் தங்கியிருந்த இச் சகோதரர்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா ஐக்கிய அரபு எமிரேற்சைக் கோரியிருந்தது.

ஆனால் இவர்கள் இருவரும் டுபாயில் இருந்து நேற்று முன்தினம் தப்பிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எந்த நாட்டுக்கு அவர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என்பது தமக்குத் தெரியாது என்று டுபாய் பொலீஸ் அதிபர் தெரிவித்தார். (ட-எ)

தமிழகத்தில

## வெளிநாட்டினர் ஊடுருவல்; விவரம் கோருகிறது பா. ஜ. க

தமிழகத்தில் ஊடுருவியுள்ள வெளிநாட்டினர் பற்றிய விவரங்களை மாநில அரசு வெளியிட வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி கேட்டுள்ளது.

இந்தக் கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவர் திரு. விஜயராகவலு இத்தகவலை வெளியிட்டார்.

பம்பாய் மற்றும் கல்கத்தா ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து தமிழகத்தில் ஊடுருவல் செய்துள்ள வெளிநாட்டினர் குறித்து மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மொழியைக் கற்கும் ஆர்வம் எம்மிடம் அரிதாகவேயுள்ளது

### இளங்குமரன் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

சுதந்திர உணர்வும், விடுதலை பெறவேண்டும் என்ற அவாவும் இன்று தமிழர்களிடையே உருவாகியுள்ள போதும், மொழியைக் கற்க வேண்டும்; மொழி வளர்ச்சியடைய வேண்டும் என்ற ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டும்.

அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் சிறப்புப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. செ. இளங்குமரன் இவ்வாறு கூறினார்.

சங்கத் தலைவரும், யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளருமான திரு ஆர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து பேசும்போது அவர் கூறியதாவது:

தமிழ் ஈழத்தில் தமிழறிஞர்கள் நிறைந்து இருக்க வேண்டும் என்ற நோக்குடன் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கென ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்ட அகராதியை வெளியிட்டுள்ளோம். வடமொழி தமிழ் அகராதியை அச்சிடும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் மத்தியில் எழுத்துப்பிழை, சொற்பிழைகளைக் காணக்கூடியதாக உள்ளது. மாணவர்கள் இச்சங்கத்தினூடாக சிறந்த தமிழறிவைப் பெற முன்வர வேண்டும் என்றார்.

திரு ஆர். சுந்தரலிங்கம் பேசுகையில் —

நாங்கள் தமிழர்கள் என்று கூறிக்கொண்டு தமிழைக் கற்காதிருப்பது தவறு. யாழ்ப்பாணம் என்றால் தமிழ் என்ற நிலை உருவாக்க வேண்டும். நாவலர் தமிழை வளர்க்க முற்பட்டார். அந்த நிலை தொடர எமது சங்கம் கடந்த 75 ஆண்டுகளாகத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது — என்றார்.

பண்டிதர் க. சச்சிதானந்தன், பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர சர்மா, திருவாளர்கள் இ. சிவானந்தன், க. சொக்கலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

மேற்படி சங்கம் 1992 ஆம் ஆண்டில் நடத்திய பாலபண்டிதர் பிரவேச பண்டிதர் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (த-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை வெல்லம் உற்பத்தி ஆரம்பம்

கொடிகாமம், மார்ச் 22 தென்மராட்சி தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் கடந்த சனிக் கிழமை முதல் பனை வெல்லம் மற்றும் பனஞ்சீனி உற்பத்தியை ஆரம்பித்துள்ளது. கொடிகாமம், சாவகச்சேரி, பளை ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (த-ரி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபூரணம் தியாகராசா

பளையைச் சேர்ந்த திருமதி சிவபூரணம் தியாகராசா 21-03-93 இல் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற தியாகராசா (இத்தாலி) அவர்களின் அன்பு மனைவியும், சஜீவன், சுஜித்தா ஆகியோரின் பாசத் தாயாரும், காலஞ்சென்ற சுந்தரம் தம்பதிகளின் மூத்த மகளும், பூநகரி செல்லையா தீவைச் சேர்ந்த சோமலிங்கம் தம்பதிகளின் மருமகளும், சிவராசா (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (விசுவமடு), சின்னம்மா நடராசா (இத்தாலி), திருநாவுக்கரசு (ஆசிரியர், முழங்காவில் கொத்தணி), கலாமோகினி ஆசிரியை, பளைக் கொத்தணி), ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருச்செந்தூர்ராணி, சிவலோகநாயகி, சிவபாதலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10-00 மணியளவில் பளையில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. குணரத்தினம்

கட்டப்பிராய்,
கலைமணி வீதி,
யாழ்ப்பாணம். (24914)

## சின்னவி அப்புக்குட்டி

கோண்டாவில் மேற்கு காளி கோவிலடியைச் சேர்ந்த சின்னவி அப்புக்குட்டி காலமாகி விட்டார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், மகாதேவன், சின்னராசா, சிவராசா, சக்திமலர், பரமேஸ்வரி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கந்தசாமி, தேவச்சந்திரன், பவளராணி, மகாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், தார்சிகா, மேனன், சித்து, முதுலா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (21 - 03 - 93) ஞாயிறு பி. ப. 2.00 மணிக்கு தாவடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. மகாதேவன்
(மகன்)

காளி கோவிலடி,
கோண்டாவில் மேற்கு. (24919)

## திருமதி அன்னம்மா இரத்தினம்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி அன்னம்மா - இரத்தினம் 21-3-1993 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நாகநாதர் இரத்தினத்தின் (உதயன், ஈழநாடு, ஈழநாதம் பத்திரிகைகளின் முகவர், கோப்பாய்) அன்பு மனைவியும், திருமதி நளாயினி துரைராசா, திருமதி சிறிகாந்தி கதிரவேலு, மனோகரன் (மனோலைட்), பிரபாகரன், சுவேந்திரினி ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைராசா, கதிரவேலு, அருள்மொழி, வசந்தராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஜினி, காந்தருபன் (சிங்கப்பூர்), பிரியதர்சன், பிரியதர்சினி, பிரபாசினி, அனுசினா, சாறுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22-3-1993) திங்கள் பி. ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் (கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்கு கோப்பாய் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
நா. இரத்தினம் (கணவன்)
இ. மனோகரன் (மகன்)
(மனோ லைட்)

கோப்பாய்.
(24913)

## மாணிக்கர் கந்தசாமிப்பிள்ளை
### (பிள்ளையார்)

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமிப் பிள்ளை 21-3-93 அன்று சுன்னாகத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், இரத்தினேஸ்வரி, யோகேஸ்வரி (வலி தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்) விக்னேஸ்வரர், விக்னராஜேஸ்வரன் B Sc (நிக்கவரெட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வராசா, காசிலிங்கம், இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயபவன், ஜெயரஞ்சி, கஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கம்மா, இராசையா, ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (22-3-93 இல் காலை 10 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
க. விக்னேஸ்வரன்

இலங்கை வங்கி ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு. (24917)

# சோலைவரி அறவிடுவதை ரத்துச் செய்ய வேண்டும்

## ஓய்வூதியர் சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 22 ''இயல்பு நிலை திரும்பி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஆதனவரி நிலுவைகளைப் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நீக்கிவிட நடவடிக்கை எடுக்கும்வரை, சோலைவரி நிலுவைகளை அறவிடும் நடவடிக்கைகளை ரத்துச்செய்யவேண்டும்.''

இப்படியான கோரிக்கையை வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் யாழ் மாநகரசபை ஆணையாளரிடம் விடுத்துள்ளது.

மாநகரசபை ஆணையாளருக்கு சம்மேளனம் அனுப்பியுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1985 ஆம் ஆண்டிலிருந்தே மாநகர சேவைகள் பல முழுமையாக வழங்கப்படவில்லை என்பதுடன், பல சேவைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே போதிய சேவைகள் வழங்காத காரணத்தினால் முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவைகளை நீக்கிவிட அமைச்சருக்கு உள்ள அதிகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடிய சாத்தியங்கள் பலமாக உண்டு. அரசியல்தீர்வின் போது இதுவும் ஒரு விடயமாக முன்வைக்கப்படலாம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-3]

## மகஸின் சிறையில் இருக்கும்

# மன்னார் வாசியை உடன் விடுதலை செய்ய உத்தரவு

கொழும்பு, மார்ச் 22 பேசாலை அகதி முகாமில் வைத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மன்னார் வாசியை உடனடியாக விடுதலை செய்யுமாறு உயர்நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

மன்னார் சின்னகரிசன் என்ற இடத்தைச் சேர்ந்த இராஜரட்ணம் சந்திரசேகரன் என்பவரையே விடுதலை செய்யுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான இவரது மனு விசாரிக்கப்பட்டு, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மனுதாரர் 1991ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி தலைமன்னார் முகாம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார் என்றும்—

மனுதாரர் பல சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு, உடல் முழுவதும் காயங்கள் காணப்படுகின்றன என்றும்—

அவர் தற்சமயம் கொழும்பு நியூ மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் உயர் நீதிமன்றத்தில் அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி எடுத்துக் கூறினார். (ஒ)

## லயனல் நியமனம்

கொழும்பு, மார்ச் 22 குற்றப்புலனாய்வுப் பணியக இயக்குநராக பொலிஸ் அதிபர் லயனல் குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு மாவட்ட பொலிஸ் அதிபராக பணியாற்றி வந்த இவருக்கு பதவி உயர்வுடன் இத்திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (உ-எ)

## உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு அறிவித்தல்

இடம்பெயர்ந்த சகல உள்ளூராட்சி ஓய்வூதியர்களும் தமது பெயர், நிரந்தர விலாசம், ஓய்வூதிய இலக்கம், தற்போதைய விலாசம், குடும்ப எண்ணிக்கை ஆகிய விவரங்களை 26-03-1993 க்கு முன் எமக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறோம்.

தலைவர்
உள்ளூராட்சி
ஓய்வூதியர் சங்கம்

904/5,
பருத்தித்துறை வீதி,
நல்லூர். (24915)

## ஆலயத்தில் வங்கிச் சேவை

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் நடைபெற்று வரும் பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டு ஆலய முன்றலில் இலங்கை வங்கியின் விசேட கருமபீடம் இன்று திறக்கப்படுகிறது.

பிரஸ்தாப கருமபீடத்தை தென்மராட்சி பிரதேச செயலாளர் திரு. பு. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திரு. த. நவரத்தினராசா, ஆலய தர்மகர்த்தா திரு சு. கந்தையா ஆகியோர் ஆரம்பித்து வைப்பர். [அ-117]

## புதிய தேர் வெள்ளோட்டம்

நல்லூர், பாணன்குளம் அருள்மிகு ஸ்ரீ நாச்சியம்மன் கோயில் புதிய தேர் வெள்ளோட்டம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி காலை 10மணிக்கு இடம்பெற உள்ளது.

# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடம்

## மொழி பெயர்ப்பாளர்கள்-ஆங்கிலம்/தமிழ்

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் அனுபவம் வாய்ந்த மொழி பெயர்ப்பாளர்கள் தங்களது அனுபவ அத்தாட்சிப் பத்திரங்களுடன் 25-03-93 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(5566)

## அன்பளிப்பு

தென்மராட்சி, மார்ச் 22 தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினர் முகமாலை சமுத்திரன் குடியேற்றத்திட்டத்தில் உள்ள 77 குடும்பங்களுக்கு பாய், அரிக்கன் லாம்பு ஆகியவற்றை கடந்த வாரம் வழங்கினார்.

இதேவேளை, 38 ஆயிரம் ரூபா செலவில் குழாய்க்கிணறும் த. பு. கழகத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## குழாய்க் கிணறுகள்

பொது மக்கள் எதிர்நோக்கும் குடி தண்ணீர்ப் பிரச்சினையை ஓரளவாவது தீர்த்து வைக்கும் முகமாக, யாழ். மாநகரசபை பிரதேசத்தில் ''யுனிசெவ்'' உதவியுடன் 20 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

சனத்தொகை அடர்த்தி அதிகமாகவும் குடிநீர்ப் பிரச்சினையுமுள்ள இடங்களில் முன்னுரிமை அடிப்படையில் இக்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

# வளரும் வாழ்த்துக்கள்



## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

கௌரவ அமைப்பாளர் அவர்கள்,
அ. இ. கம்பன் கழகம்,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்!

வணக்கம்! இவ்வாண்டு தாங்கள் வழங்கும் மகர யாழ். விருதை மிகவும் பொருத்தமாக Dr. ந. ச. சிவகுமாரன் அவர்களுக்கு வழங்க முடிவு செய்தமை எம்மால் பெரிதும் பாராட்டக் கூடிய செய்தியாகும். தகுதியும், புலமையும் தொண்டுள்ளமும், தியாகமும் கொண்டு கடமை புரியும் இப் பெருந்தகையை முதன் முதலாக அமைப்புரீதியில் கௌரவிக்கும் பெருமையை அகில இலங்கை கம்பன் கழகம் பெறுவது எம்போன்றோருக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. எனவே, இந்நேரத்தில் கம்பன் கழக பணிகளை வாழ்த்தி வைத்திய கலாநிதி ச. சிவகுமாரன் அவர்களை வாழ்த்தி பெருமை அடைகிறோம்.

வணக்கம்,

— தங்கம்மா அப்பாக்குட்டி.
தலைவர்,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
15-03-1993.

## பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

அமைப்பாளர்,
அகில இலங்கைக் கம்பன் கழகம்,
யாழ்ப்பாணம்.

பேரன்புடையீர்!

கம்பன் கழக நடவடிக்கைகளை அவதானித்து ஆங்காங்கே மகிழ்ச்சியடைவதும் கடந்த நான்கு ஆண்டு கால எனது வாழ்க்கை வரலாற்று நிகழ்வாகி விட்டது. உங்களுடைய நிகழ்ச்சிகளிலும், புதிய துறைகளிலும் ஓர் அர்த்தமும், காலத்தின் தேவைக்கேற்ற அழுத்தமும் இருப்பதனை நான் அவதானிக்கத் தவறுவதில்லை. ஒரு முகாமையாளனுக்கு கற்பனைச் சக்தி இன்றியமையாதது என்று நான் அடிக்கடி கூறுவேன். ஒரு நிர்வாகி கற்பனை வளமற்றவனாக இருந்தால் மக்களுக்கு தேவையான முறையில் சேவையாற்ற முடியாது அந்த வகையில் 'மகர யாழ்' முயற்சி உங்கள் கற்பனை வளத்தைக் காட்டுகின்றது.

நண்பன் சிவகுமாரனைத் தவிர அது வேறு யாருக்காவது போகமுடியாது என்பது எனது கருத்து - இவ்விருது மூலம் இருபக்கமும் பெருமையடைந்தது இது ஒரு நல்ல மிக அவசியமான முயற்சி - இந்தச் சந்தர்ப்பத்தில் எனது கருத்தையும் கூற விரும்புகின்றேன். இந்த மண்ணிற் கவனிக்கப்பட வேண்டிய துறைகள் பல உண்டு அவற்றில் மிக முக்கிய துறை கல்வித்துறையாகும். அத்துறையின் பின்னடைவினை 'மகர யாழ்' போன்ற தெரிவு மூலம் ஓரளவு சீர்செய்யலாமெனக் கருதுகின்றேன். அடுத்த வருடம் ஒரு நல்லாசிரியனையும், சிறந்த அதிபரையும் தெரிவு செய்யும் முறையை மேலதிகமாக அறிமுகப்படுத்தினால் நல்லதென்று கருதுகின்றேன் - ஏற்றுக் கொண்டால் முடிந்ததைச் செய்யுங்கள்.

அம்பையன்றி எய்தவனையே குறிப்பவன் நான். அந்த அடிப்படையிலேயே இக் கடிதத்தை இல்லை.. என் மன நினைவுகளை உங்களுக்கு எழுதுகின்றேன்.

கம்பன் கழகமூடாக நல்ல சமுதாயம் படைப்போமாக.

சுந்தரம் டிவகலாலா.
பிரதேச உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்.

24, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
15-03-1993.

மகத்தான மனிதரை மனதார வாழ்த்துகிறோம்

காரைநகர் கம்பன் கழகம்
ஊரெழு கம்பன் கழகம்
வடமராட்சி கம்பன் கழகம்

(சி-4566)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org